# டிரைபெட் செய்திகள்

தமிழ் நாடு

28/11/ to 04/12/2021

திருப்பத்தூரில் உள்ள புதுர்நாடு வன்-தன் விகாஸ் கேந்த்ரா உறுப்பினர்களுக்கு டிரைபெட் மற்றும் MSME இணைந்து ஐஐடி- கான்பூர் மூலம் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. தேன் மற்றும் துளசியை கொண்டு சோப் செய்வது, சீதாப்பழத்தை மதிப்பு கூட்டல் செய்வது, தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.









இந்திய அரசின் பழங்குடியினர் நலத்துறை அமைச்சகத்தின் சார்பாக புது டெல்லியில் நடந்த தேசிய அளவிலான மலைவாழ் மக்கள் மேம்பாட்டு பயிற்சி முகாமில் தமிழ்நாட்டை சேர்ந்த திருமதி.பிரியா மற்றும் திருமதி.மகுடேஸ்வரி கலந்து கொண்டனர். அவர்களை
உடுமலை சுற்றுச்சூழல் சங்க தலைவரும் தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் மணி அவர்கள், செயலாளர் நாகராசன் அவர்கள்,கலிலியோ அறிவியல் கழக ஒருங்கிணைப்பாளர் கண்ணபிரான் மற்றும் உடுமலை சுற்றுச்சூழல் சங்க செயற்குழு உறுப்பினர் சதீஷ்குமார் ஆகியோர் பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.






பழங்குடியின பகுதிகளில் 50,000 'வன் தன் விகாஸ் கேந்திராக்கள்' நிறுவப்பட்டதை கொண்டாடும் வகையில் TRIFED 29/11/2021 அன்று VC ஏற்பாடு செய்தது. அதில் இந்தியா முழுவதிலுமிருந்து பழங்குடியின சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்று, தங்கள் வெற்றிக்கதையை பகிர்ந்து கொண்டனர். MD, TRIFED Sh. Pravir Krishna அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்து தொடர்ந்து அப்பணியை முன்னெடுத்துச் சென்று வாழ்வில் வளம் பெற கேட்டுக்கொண்டார்.

நவம்பர் 16, 2021 அன்று, ஜனன்ஏ, புது தில்லியில் தொடங்கிய தேசிய பழங்குடியினர் திருவிழாவான “ஆதி மஹோத்சவ்” 30.11.2021 அன்று கண்கவர் கலைநிகழ்ச்சிகளுடன் நிறைவடைந்தது. 15 நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில் நாடு முழுவதும் உள்ள பழங்குடியினரின் மாறுபட்ட பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலை, கைவினைப் பொருட்கள், இயற்கை விளைபொருட்கள் மற்றும் சுவையான உணவு வகைகள் கொண்ட 200க்கும் மேற்பட்ட ஸ்டால்களுடன், 1000 பழங்குடியின கைவினைஞர்கள் மற்றும் கலைஞர்கள் பங்கேற்றனர். ஒரு ஸ்டாலில் குறைந்தபட்சம் 3 லட்சத்திலிருந்து அதிகபட்சம் 20 லட்ச்சம் வரைக்கும் விற்பனை ஆனதாக தெரிகிறது. சிறப்பாக செயல்பட்ட கைவினைஞர்கள் தேர்வு செயப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.







- வேலூரில் உள்ள பிஞ்சுமந்தை வன் தன் விகாஸ் கேந்திரா தயாரிக்கும் உணவு பொருட்களுக்கு, உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம் (FSSAI) சான்றிதழ் வழங்கியுள்ளது.
- வன்-தன் விகாஸ் கேந்திராவின் இந்த வாரவிற்பனை மதிப்பு Rs.25,000/-.

8 VDVKC

2400 Beneficiaries

192 VD SHGs






https://www.tribesindia.com/